# DEVOTION AND MEDITATION

# இறைவணக்கவும், தியானவும்

**வெள்ளிக்கிழமை குத்துபா** 11-05-2012

## FRIDAY SERMON

# HAZRAT MUNIR AHMAD AZIM (A)

இட்டுபோகோ, டினிடாட், இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவை சார்ந்த சில தீவுகள் போன்ற நாடுகளின் பெயர்கள் எடுத்துக்கூறிக்கொண்டு, பூவுலகிலுள்ள தனது தோழர்களுக்கெல்லாம் சமாதான வாழ்த்துக்களைத் தெரிவித்த பிறகு கலீபஃத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹீத்தும் தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதி இவ்வாறு கூறினார்கள்.

வனப்பும் சிறப்பும் புகழும் வாய்ந்த நமது இஸ்லாமத போதனைகளின்படி ஒரேயொரு ஆத்மீக வழி இறைவணக்கவும், தியானவும் ஆகும். ஆனால் அதிலிருந்து உண்மையான பலன் பெறுவதற்கு சற்று காலதாமதமாகும். இறைவணக்கத்தினுடையவும், தியானத்தினுடையவும் வேர்கள் பசுமரத்தாணிபோல் உள்ளத்தில் பதிந்து அதன் மூலம் வலுவான உறவை வார்த்தால் மட்டுமே அதனுடைய உண்மையான பலனை அனுபவிக்கமுடியும் அல்லது அடைய இயலும். ஆகவே இறைவணக்கவும் தியானவும் நேர்வழியே ஆகும்.

ஒவ்வொரு ஆன்மாவுக்கும் உடலளவிலான ஒரு முன் மாதிரிகை தேவை என்பது இறைவனின் இயற்கை சட்டத்தில் உட்பட்டதாகும். உடலளவிலான அம்முன்மாதிரிகை மனிதனில் முழுமைப்பெற்றுவிட்டால் அதன் விளைவாக சுயமாகவே அவனது ஆத்மா தூய்மையடைகின்றது. இந்த நூற்றாண்டில் இறைவனுடைய கலீஃபா என்ற நிலையில் என் வாயிலாக அந்த முன் மாதிரிகையை அல்லாஹ் திறக்க செய்திருக்கின்றான். இந்த முன்மாதிரிகையோடு நீங்கள் ஒவ்வொரு நபரும் உருகி சேர்ந்தால் அது உங்கள் வாழ்வை தூய்மையான வெற்றியின் பால் எட்டச்செய்யும். இஸ்லாமை சார்ந்த சாதாரண மக்கள் மத்தியில் நம்பிக்கையை குறித்த விஷயங்களில் ஏராளமான தவறான எண்ணங்கள் பிறந்திருக்கின்றது. ஜமாஅத்தே அஹ்மதியாவும் இதிலிருந்து அப்பாற்பட்டதல்ல. இத்தவறுகள் யாவும் நிகழ்வது, கிறிஸ்தவர்களோடு கூட்டமைத்ததின் பலனேயாகும். ஆனால் இப்போது அல்லாஹ் நாடுகின்றான், இஸ்லாமின் தூய்மையையும் அதன் ஒளியையும் வெளிப்படுத்த வேண்டுமென்று. இஸ்லாமின் உண்மையான வடிவம் வெளிப்படுவது அதன் வளர்ச்சிக்கு மிக அவசியமாகும். நம்பிக்கையின் உறுதி வளருவதை தொடர்ந்து அதன் செழிப்பும் அதிகரிக்கும்.

இப்போராட்டத்தில் இறைவணக்கவும் தியானவும் மிக அவசியமாகும். ஏனெனில், சிலரின் உதாசீனம் காரணமாக உண்மையான நம்பிக்கை அவர்களில் நின்று மறைந்து விட்டது. மற்று சிலரில் நான் என்ற ஆணவம் மூலமும், வேறுசிலரிலாகட்டும் உண்மையின் பாலும் உண்மையான நம்பிக்கையாளரின் பாலும் எவ்வித விருப்பவும் இல்லாத காரணத்தாலும். விஷயங்கள் இவ்வகையில் இருந்தாலும் அல்லாஹ்வின் உதவியின்றி மனிதர்களை மூடசெய்திருக்கின்ற இத்திரையினை அகற்ற இயலாது என்பதாகும். இவ்விடத்திலாகும் இறைவணக்கத்தினுடையவும் இறைதியானத்தினுடையவும் தேவை தவிர்க்க முடியாத விஷயமாகுவது. வெறும் வெளிப்படையான வார்த்தைகளால் எவ்விதமான பலனும் கிடைப்பதில்லை என்பது, நபிமார்களின் வருகை அமல்படுத்தப்பட்ட காலம் முதல் நிலைநின்றுவரும் ஒரு உண்மையாகும். இறைவணக்கவும் தூய்மையான உள்ளவும் ஆத்மீக முன்னேற்றத்திற்கு மிக தேவையானவையென்று தெளிவிக்கப்பட்டிருக்கின்றது. வரலாறை புரட்டிப்பார்த்தால் ஒரு உண்மை புலனாகும். ஹஸ்ரத் முஹமது(ஸ) ஒரு தனிமனிதனாக நிலைநின்றிருந்த காலம் மக்கள் அவரின் உண்மையான நம்பிக்கையின் பால் ஈர்க்கப்பட்டன. மாறாக இன்று ஆயிரக்கணக்கான முல்லாக்களும், மௌலவிகளும், அமீர்மார்களும், சொற்பொழிவு ஆற்றவும் கொள்கை பரப்பவும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களில் எவரும்

நேர்மையானவர்களோ ஆத்மீகத்தை உட்கொண்டவர்களோ இல்லை. அக்காரணத்தினால் மக்கள் மத்தியில் எவ்வித ஆத்மீக மாற்றத்தையும் ஏற்படுத்த அவர்களால் முடியவில்லை.

மனித உள்ளங்களில் குடிபுகுந்திருக்கும் விஷத்தை வெறும் வார்த்தைகளால் அகற்ற இயலாது. அதற்கு உண்மையாளர்களோடு உள்ளபூரணமான நட்பும் அவர்களின் வேண்டுகோளும் தேடவேண்டியது அவசியமாகும். அவ்வாறு பலன் பெற்றுவிட விரும்புகின்றோர்கள் அவ்வழியை தேர்ந்தெடுத்து அல்லாஹ் கற்பித்திருக்கும் உண்மையான நம்பிக்கையைப் பற்றி புரிந்துக் கொள்ள வேண்டியதும் ஆகும். அவ்வாறு செய்தால் நம்பிக்கையின் பல்வேறு பகுதிகளைக் குறித்து உணர்ந்துகொள்ளலாம் என்று மட்டுமல்லாமல் எங்களிடவும் மற்று முஸ்லீம்களிடமும் காணுகின்ற கருத்து வேற்றுமையை பற்றி புரிந்து கொள்ளவும் முடியும். அது வழியாக உண்மையைத் தேடுகின்ற உங்களுக்கு கிடைக்கும் சரியான பதில் மூலம் உங்கள் நேர்மையான ஆத்மீக முன்னேற்றத்திற்கு அது வழிவகுத்து விடும். இன்ஷா அல்லாஹ். ஆனால் கவனித்துக்கொள்ளுங்கள். அல்லாஹ்வின் பாதை இவ்வாறாகும். அதாவது ஒரு விஷயத்தை குறித்து இரண்டு நம்பிக்கை அல்லது யோசனை எழும்பினால் அதில் ஒன்றே ஆத்மீக முன்னேற்றத்தை அடைவதும் வெற்றிபெறுவதும் என்பதில் ஐயமில்லை.

அல்லாஹ்வின் தூதர் அவதாரமெடுக்கின்ற போது அந்த ஆத்மீக வழிகாட்டியோடு இணைந்து நின்றே உங்கள் நேரத்தை செலவிடவேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். தன் சுற்றும் குழுமியிருக்கும் உண்மையைத் தேடுகின்றோர்களுக்கு இறைமார்க்கப் போதனையை வழங்குடியவரோ ஆவார் அந்த இறைதூதர். அவருடைய வார்த்தைக்கு முக்கியத்துவமும் முதலிடவும் அளிக்க வேண்டும். எவ்வகைபட்ட சந்தேகமோ குழப்பமோ ஏற்பட்டால் அதை மறைத்து கொள்ளாமல் வெளிப்படையாக கூறுவதேயானால் உடனடியாக அதற்கான தீர்வைக் காணமுடியும். அவ்வாறு செய்தால் நம் இதயத்தை துழைத்து உள்ளே புக நினைக்கும் சந்தேகத்தினுடையவும், குழப்பத்தினுடையவும் முட்களை எளிதில் அகற்ற முடியும். இப்படிப்பட்ட சந்தேகங்கள் எழும்புவதும் அதை உடனடியாக நீக்கம் செய்வதும் நமது ஆத்மீக வளர்ச்சிக்கு அதிக பலனை அளிக்கின்றது. சமாதானத்தோடும் பொறுமையோடும் இவ்வாறு இணைந்து நிற்பது மிக அவசியமாகும். ஒருவகையிலுமான ஐய்யத்திற்கும் இடம் கொடுக்காமல் இறை தூதரின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். சந்தேகம் என்பது விஷத்தன்மையுடையதாகும். அது சிறுது சிறிதாக உள்ளத்தில் புகுந்து கொஞ்சம் கொஞ்சமாக நம்மை அழித்துவிடுகின்றது.

இரண்டாவதாக அல்லாஹ் புதியதாக ஒரு சொர்க்க திட்டத்தை அல்லது ஒரு இறை திட்டத்தை அமல்படுத்தும்போது அதற்காக அவனே பூவுலகில் ஒரு ஆத்மீக தலைவரை நியமிப்பான். அவரின் நியோகத்தின் நோக்கம் அனைத்து ஆத்மீக அமைப்புகளிலும் காண்கின்ற குற்ற குறவுகளை விலக்கிகொள்வதேயாகும். அக்காரணத்தால் அனைவரும் அவருக்கு எதிரிகளாக மாறுகின்றனர். பின்னர் அவருக்கு இன்னல்களையும், இடையூறுகளையும் அவர்கள் ஏற்படுத்துகின்றனர். மட்டுமல்லாமல் எவர் ஒருவர் அந்த இறை தூதரின் மீதி நம்பிக்கைக்கொண்டு அவரது கொள்கையில் இணைந்து கொள்கின்றாரோ அந்நபரையும் அவர்கள் துன்புறுத்தவும், அக்கிரமிக்கவும் செய்கின்றன. நண்பர்களும் உற்றவரும் உறவினர்களும் எதிரிகளாக மாறுகின்றார்கள். உதவி எதிர்பார்க்கின்ற இடங்களிலெல்லாம் எதிர்ப்பும் ஏளனவும் மட்டுமே கிடைக்கின்றன. சுருக்கமாக கூறினால் துன்பவும், துயரவும் நிறைந்தும் உதவியற்றதுமான பாதை வழியாக அந்த நம்பிக்கையாளருக்கு பயணம் செய்ய வேண்டிய கட்டாய நிலை உருவாகின்றது. மக்களில் நின்று எதிர்பார்த்திருந்த வெகுமதியும் ஆதரவும் அவனிலிருந்து அகன்றுவிடும். ஆனால் இவை அனைத்தும் சாதாரண சட்டத்திற்கு உட்பட்டவையேயாகும். இவ்வகையான எல்லாவித இன்னலுகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆயத்தமாக ஒவ்வொரு நம்பிக்கையாளர்களும் தயாராக இருக்க வேண்டும்.

எவர் ஒருவர் உறுதியோடும், நம்பிக்கையோடும் இந்த அறை கூவலுகளை நேரிடுவாரோ அவரே அந்த ஆத்மீக பாதையில் அல்லது இறைவழியில் நிலைநிற்பவர். அவ்வாறின்றி இந்த சோதனைகளுடையவும், இன்னல்களுடையவும் முன் திணறிக்கொள்கின்றவன் அப்புனித பாதையில் நின்று கொஞ்சம் கொஞ்சமாக விலகி பழைய நிலையில் செல்கின்றார். பிறகு அவரும் அவருடைய குடும்பவும் நேரிடுகின்ற இவ்வுலக

நஷ்டங்கள் அவனது உள்ளம் தாங்கும் அளவிற்கு அப்பார்பட்டதாகயிருக்கும். அந்நபரின் இறுதிபலன் ஆரம்பநிலையைவிட கொடியதாக இருக்கும். சஹிஹில் இஸ்லாம் என்ற அமைப்பில் இணைந்து கொள்ள முன்வருவதற்கு முன் ஒவ்வொரு நபரும் இந்த உலகத்தின் ஏளனங்களும், துன்புறுத்தல்களும் ஏற்க ஆயத்தமாக வேண்டும். ஒவ்வொரு ஜமாஅத் சஹிஹில் இஸ்லாம் உறுப்பினர்களுக்கும் இது தவிர்த்துகொள்ள முடியாத விஷயம் ஆகும்.

அப்படிப்பட்ட ஒரு மனநிலையை கட்டி உயர்த்துகின்றவர்கள் இந்த உண்மை வழியில் வெற்றி அடைவார்கள். ஆரம்ப நிலையில் அவன் இழந்து கொண்டதெல்லாம் அவனது இறைவன் அவனிடம் திரும்பக்கொண்டு வருவான். ஒருவிதை வளர்ந்து ஒரு மரமாகிய பிறகே அது பூக்களும், பழங்களும் தருகிறது. அதற்காக சிறுகாலம் அவ்விதையை மண்ணிற்கு அடியில் மறைத்து வைக்க வேண்டும் என்றால் மட்டுமே அது பெரிய மரமாகி வளர்கின்றது. அது போன்ற பொறுமை மிக அவசியமாகும். அவன் எளிமையிலும் எளிமையானவனாக இருக்க வேண்டும். அப்போது அவன் உயர்த்தப்படுவான். அதை தொடர்ந்து அவன் மேன்மையடைந்து விடுவான், வளர்ந்து விடுவான், வென்றுவிடுவான்.

நான் இந்த உரையை முடித்து கொள்வதற்கு முன் உங்கள் அனைவருக்கும் அறிவுறுத்துகின்றேன். அதாவது நாம் எளிமையான வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது நமது கொள்கையில் உட்பட்ட விஷயமாகும். நமது ஒன்று கூடுதல் பலனற்றவையாக கூடாது. அதாவது வெளியிலிருந்து வந்து சேர்ந்திருக்கும் சில கலாச்சாரங்கள் இன்று தவிர்க்கயியலாத விஷயமாக மாறியிருக்கின்றது. அது யூரோப்பியனாகட்டும் அமெரிக்காவாகட்டும், ஏசியாவோ, ஆப்பிரிக்காவோ ஆகட்டும் அவ்வகை கலாச்சாரங்களும், செயல்களும் இஸ்லாமிக்கு புறம்பான காரியங்கள் ஆகும். அவ்வகையான கலாச்சாரங்களும் செயல்களும் நம்மை துன்பத்திலும், அதர்மத்திலும் அழைத்து செல்லும். ஆகவே நமது உணவு விஷயத்திலும், ஒன்று கூடுதல் நேரங்களிலும் வேறுபிரிக்கின்ற கட்டத்திலும் நாம் ஒரு எளிமையான வழியை பின்பற்ற வேண்டும். இன்றைய குத்துஃபாவை நல்ல நிலையில் புரிந்து கொள்ள அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அருள்புரிவானாக. அவன் உங்களை நேர் வழியில் நடத்துவானாக. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Issued by R. Jamaludin Raother Amir
Jamaat UI-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com
09447001832

Translated by
Abdhul Sudheer

Proof Reader by
Azim Ahmad
Sadr Sahibul Faraj
09789180817